**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025 – PW- 4**

| | |
|---|---|
| Name | திருமதி. கோகிலா |
| Husband/Father Name | கோவிந்தராஜ் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 42 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரிகள் ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.01.2025 அன்று மாலை 05.15 மணியளவில் நான் திருமால்பூரில் உள்ள கடைக்கு சென்றேன். அப்போது பாண்டியன் என்பவர் பள்ளி அருகே நின்றுக்கொண்டிருந்தார். நான் எதற்காக இங்கு நிற்கிறாய் என்று கேட்டதற்கு அவர் நான் கிரிக்கெட் விளையாட வந்ததாக கூறினார். நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது எங்கள் அருகே இருந்த பாலத்தின் அருகில் அலறல் சத்தம் கேட்டது. உடனே நானும் பாண்டியனும் அலறல் சத்தம் கேட்டு இடத்திற்கு சென்றோம்.

அப்போது எங்கள் ஊரை சேர்ந்த தமிழரசன் எரிந்துக்கொண்டிருந்தார் அப்போது என் உடலின் மீதிருந்த துண்டாலும் என்னுடன் இருந்த பாண்டியன் அவருடைய லுங்கியாலும் தீயை அணைக்க முற்பட்டோம் அப்போது விஜயகணபதியின் மீதும் தீ பரவி எரிந்துக்கொண்டிருந்தார். நாங்கள் தமிழரசனை துண்டாலும்,

லுங்கியாலும் தீயை அணைத்தோம். பிறகு விஜய கணபதியை தீயை அணைக்க மண்ணில் புரட்டினோம் பிறகு நாங்கள் சத்தம் போட்டு அருகில் இருப்பவர்கள் கூட்டமாக கூடி தீயை அணைத்தோம்.

அப்போது உடன் இருந்த சங்கர் மற்றும் மணி ஆகியோர்களிடம் என்ன நடந்தது என்று கேட்டேன் அதற்கு மணி, பிரேம், தமிழரசன், சங்கர் ஆகியோர் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், பிரேமிற்கும், தமிழரசன் என்பவருக்கும் ஏற்கனவே ஏதோ பிரச்சனை இருந்ததாகவும், நான் பனப்பாக்கம் சென்று வண்டிக்கு பெட்ரோல் வாங்கி வந்ததாகவும், சம்பவ இடத்தில் நான் சென்று சண்டையை மடக்க முற்பட்ட போது பிரேம்குமார் என்பவர் சங்கர் கையில் இருந்த பெட்ரோல் கேனை வாங்கி தமிழரசன் மீதும் விஜயகணபதியின் மீதும் ஊற்றியதாகவும், அப்போது சமாதானமாக போகலாம் என்று பேசியதாகவும், சிறிது தூரம் சென்றவுடன் பிரேம் என்பவர் தனது பாக்கெட்டில் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சியை கிழித்து தமிழரசன் மீது போட்டதில் அந்த தீ விஜயகணபதியின் மீதும் பரவியது.

பிறகு எனக்கு மயக்கம் வந்தது. அதன் பிறகு ஊர் பொதுமக்கள் 108 ஆம்புலன்சை வரவைத்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னை, K.M.C மருத்துவமனைக்கு தீக்காயம் அடைந்த தமிழரசனை, தமிழரசனின் பாட்டி மற்றும் மாமாவும் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். பிறகு தமிழரசன் 6 நாட்கள் சிசிச்சை பெற்று மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார். எங்கள் ஊரில் சிறிய பெட்டி கடை தான் உள்ளது அதனால் தான் அங்கு பொருள் வாங்க திருமால்பூர் கடைக்கு

சென்றேன். இது சம்பந்தமாக மறு நாள் என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் 100 நாள் வேலைக்கு செல்வேன். நான் கடைக்கு செல்லும் போது சேலை அணிந்து செல்வேன் ஆனால் சம்பவ தினத்தன்று நைட்டி அணிந்து சென்றேன். இந்த வழக்கில் சாட்சியம் அளித்த சங்கர் என்னுடைய மகன் என்று சொன்னால் சரிதான். நான் கடைக்கு செல்லும் போது கையில் பை ஏதாவது எடுத்து செல்வேனா என்றால் செல்வேன் ஆனால் அன்றைய தினம் எதுவும் எடுத்து செல்லவில்லை.

என் வீட்டிலிருந்து பள்ளி அருகே இருந்த பாண்டியனிடம் நான் பேசிய தொலைவு எவ்வளவு இருக்கும் என்று சொன்னால் 100 மீட்டர் இருக்கும். நான் பாண்டியனை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் பள்ளியினுடைய காம்பவுண்டுக்கு உள்ளே தான் பார்த்தேன். நான் பாண்டியனை பார்த்து சத்தம் கேட்கிறது என்று கூறியவுடன் பாண்டியன் எரியும் இடத்திற்கு ஓடிவிட்டார். நான் ஒரு பக்கம் ஓடிவிட்டேன்.

நான் பாண்டியனிடம் பேசும் போது ஆட்கள் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததை நான் கண்ணால் பார்க்கவில்லை சம்பவத்திற்கு பிறகு தான் பார்த்தேன். சம்பவம் எப்படி நடந்தது என்று நான் எனது மகன் சங்கரிடம் தான் கேட்டேன் என்று சொன்னால் சரிதான். நான் எனது மகனிடம் கேட்ட போது அவர் பனப்பாக்கத்தில் இருந்து பெட்ரோல் வங்கி வந்ததாக கூறினாரா என்றால் சரிதான். சம்பவ தினம் காணும் பொங்கல் என்றால் சரிதான். அன்றைய தினம் வீட்டில் சமையல் செய்திருந்தேனா என்றால்

இல்லை.

நான் போலீஸ் விசாரணையில் தமிழரசன் எரிந்துக்கொண்டிருந்த போது நான் அணிந்திருந்த துண்டை அவர் மீது போர்த்தியதாக கூறியிருந்னோ என்றால் கூறியிருந்தேன். சம்பத்தை கேட்டு சுமார் 50 நபர்கள் கூடிவிட்டார்கள். சம்பவ இடத்திற்கு ஒரு ஆம்புலன்ஸ் வந்தது. அந்த ஆம்புலன்சில் தமிழரசன் அவரது பாட்டி மற்றும் மாமா ஆகிய மூவர் தான் சென்றார்கள். ஆம்புலன்சில் தமிழரசனை காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மேற்படி விவரத்தை தமிழரசனின் பாட்டியும் மாமாவும் ஊர்காரர்களுக்கு தெரிவித்ததன் அடிப்படையில் நான் தெரிந்துக்கொண்டேன்.

என்னை போலீசார் சம்பவ மறுதினம் காலை விசாரித்தார்கள். என்னை பெண் போலீசார் தான் விசாரித்தார். என்னை விசாரித்தவர் பெயரை பற்றியும் அவருடைய நிலை பற்றியும் என்னிடம் கூறவில்லை. 6 நாட்கள் தமிழரசன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்ததை நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. தமிழரசன் மருத்துவமனியல் அனுமதித்திருந்தார் என்பது பற்றி அக்கம் பக்கத்தினர் பேசியதை வைத்து தெரிந்து கொண்டேன்.

முதல் விசாரணையில் கூறிய சம்பவத்தை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தை பற்றி முழுக்க முழுக்க எனது மகன் தான் என்னிடம் கூறினார் என்று சொன்னால் சரிதான். நான் மயக்கம் போட்டு விழுந்ததுவிட்டேன் அதன் பின்னர் தான் கூறினார். நான் மயக்கம் அடைந்து கால் மணிநேரத்திற்குள் விழித்து விட்டேன். ஆம்புலன்ஸ் வந்த உடன் நான் விழுத்துவிட்டேன்.

நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னால்

சரிதான். மேற்படி சம்பவமே எனது மகன் சங்கர், விஜய கணபதி, தமிழரசன், மணிகண்டன் ஆகியோர் பிரேம்குமாரை எரித்து கொல்வதற்காக வாங்கி வந்த பெட்ரோலை எனது மகன் சங்கர் பதற்றத்தில் பிரேம்குமாரின் மீது ஊற்றிய போது அது தவறி தமிழரசனின் மீதும் விஜயகணபதியின் மீதும் பட்டு தீக்காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் தவறு.

இந்த வழக்கில் என் மகனை காப்பாற்ற வேண்டி தான் முன்னுக்கு பின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என் மகனுடைய இரு சக்கர வாகனம் சம்பவ தினத்தன்று என் வீட்டில் தான் இருந்து என்று சொன்னால் சரிதான். எனது மகன் என்னிடம் எதுவும் கூறாமல் அவரது நண்பவர்களுடன் கிளம்பி சென்றுவிட்டார். என் மகன் எத்தனை மணிக்கு வீட்டை விட்டு கிளம்பினார் என்று எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் இறப்பு ஏற்பட்டதால் அந்த இறப்பிற்கு பக்கத்து தெருவிற்கு தான் சென்றிருந்தேன்.

என் மகன் பனப்பாக்கம் சென்று பெட்ரோல் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு எப்போது வந்தார் என்றால் வீட்டிற்கு வரவில்லை அவருடைய நண்பரை அழைத்து வந்து இறக்கி விட்டு விட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு எனது மகனை விசாரித்த போது மேற்படி விவரத்தை என்னிடம் கூறினார். நான் வீட்டை விட்டு மாலை சுமார் 04.50 மணிக்கு கிளம்பி பள்ளிக்கு அருகே சென்றிருப்பேன். பாண்டியன் பள்ளிக்கு உள்ளே தான் இருந்தார். நான் பள்ளி அருகே சென்ற போது பள்ளி காம்ப்பவுண்ட்டு க்கு வெளியே இருந்து பேசினேன்

பாண்டியன் பள்ளி காம்பவுண்ட் உள்ளே இருந்து பேசினார்.

பாண்டியனிடம் 5 நிமிடத்திற்கு குறைவாக தான் நான் பேசினேன். போலீசார் என்னை 17–ம் தேதி காலை 10 அளவில் மணியின் வீட்டருகே விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னை விசாரித்த போலீசாரின் தகுதி பற்றி எனக்கு தெரியாது. ஆனால் பெண் போலீசார் தான் விசாரித்தார். நான் பள்ளி அருகே சென்ற போது பள்ளி காம்பவுண்ட்டு க்கு வெளியே இருந்து பேசினேன் பாண்டியன் பள்ளி காம்பவுண்ட் உள்ளே இருந்து பேசினார் என்றும் சுமார் 5 நிமிடம் பேசியதாக போலிஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன்.

நான் நின்றுக்கொண்டிருந்த இடத்தில் இருந்து அலறல் சத்தம் கிழக்கு திசையில் சுமாராக 40 – 50 அடி தொலைவில் கேட்டது. அலறல் சத்தம் கேட்ட போது பாண்டியன் பள்ளியின் காம்பவுண்ட்டுக்குள் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அலறல் சத்தம் மேம்பாலத்திற்கு அப்பால் கிழக்கு திசையை நோக்கி மண் பாதையில் வந்தது. நெல்வாயில் இருந்து திருமால்பூர் வரும் சாலை தார்சாலை என்று சொன்னால் சரிதான்.

விஜயகணபதியை தீயை அணைப்பதற்காக மண்ணில் போட்டு புரட்டியதாக முதல் விசாரணையில் கூறிய விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் அலறல் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்த போது அங்கு யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் மணிகண்டன், சங்கர், நான் மற்றும் பாண்டியன் ஆகியோர் இருந்தோம் பிறகு சத்தம் கேட்டு ஊர் பொதுமக்கள் மற்றும் திருமால்பூரை சேர்ந்த பசங்களும் வந்தார்கள்.

நான் சம்பவ இடம் செல்லும் போது ஊர் பொதுமக்கள் சுமார் 50

பேர் கூடியிருப்பார்கள். திருமால்பூர் பெரிய ஊர் என்றும், அதில் 3000க்கும் மேற்பட்ட மக்கள் வசிப்பார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி மேம்பாலத்திற்கு தெற்கில் சுமார் 40 அடி தொலைவில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ தினம் காணும் பொங்கல் என்பதால் அந்த நேரத்தில் ஆலமரத்தருகில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்று கொண்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

தமிழரசனுக்கும், விஜயகணபதிக்கும் உடலில் தீ எவ்வாறு பற்றியது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் அணிந்திருந்த துண்டை போலீசார் வசம் ஒப்படைத்தேனா என்றால் அது தமிழரசன் உடன் மருத்துவமனைக்கு சென்று விட்டது. "சிறிது தூரம் சென்றவுடன்" என்ற வார்த்தையை நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. ஆம்புலன்சிற்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

மேம்பாலத்திற்கு அருகில் கிழக்கே கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். காஞ்சிபுரம் மருத்துவமனையில் விஜயகணபதி எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றார்கள் என்றால் உடனடியா இருவரையும் சென்னை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். சென்னை KMC மருத்துவமனையில் விஜயகணபதி எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றார் நிறைய நாட்கள் இருந்தார் ஆனால் எத்தனை நாட்கள் எனக்கு தெரியாது. தமிழரசன் அவர் இறந்த பிறகும் சிகிச்சை பெற்றார்.

தமிழரசன் 22–ம் தேதி இறந்ததாக நான் தகவல் அறிந்தேன். நான் அணிந்திருந்த துண்டை எடுத்து பாண்டியனிடம் கொடுத்து தீயை

அணைக்க சொன்னதாக போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் மேம்பாலத்தை தாண்டி நெல்வாய் செல்லும் வழியில் கோவில் அருகே தான் வந்தது அப்போது மாலை 05.45 மணியிருக்கும். சம்பவம் நடந்து 10 நிடத்திற்குள்ளாக ஆம்புலன்ஸ் வந்து விட்டது. ஆலமரத்திற்கு எதிரே உள்ள கடைகளில் பெட்ரோல் விற்கிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

எனது மகன் பனப்பாக்கத்திற்கு சென்று பெட்ரோல் வாங்கியதாக என்னிடம் கூறினாரா என்றால் சம்பவம் முடிந்த பிறகு கூறினார். சம்பவம் நடந்து முடிந்த பிறகு காயம் பட்ட நபர்களை ஆம்பிலன்சில் ஏற்றிய பிறகு என் மகனிடம் விசாரித்த போது மேற்படி விவரத்தை என்னிடம் கூறினார். அலறல் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்து தீணை அணைக்க முயற்சித்த போது என் மகன் என்னிடம் பெட்ரோல் வாங்கி வரச் சென்ற விவரத்தை கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு மயக்கம் வந்த விவரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

எனது மகன் சங்கர் தான் மாலை நேரத்தில் பிரேம் குமார் மீது பெட்ரோல் ஊற்றினார் என்றும் அப்போது பிரேம்குமார் அவர் மீது படாமல் தப்பித்து சென்றுவிட்டார் என்றும் அந்த பெட்ரோல் தான் தவறி தமிழரசன் மீதும் விஜய கணபதி மீதும் பட்டது என்றும், பெட்ரோல் ஊற்றிய வேகத்திலேயே தீக்குச்சியை எனது மகன் சங்கர் தான் கொளுத்தி போட்ட போது பிரேம்குமார் வேகமாக சென்றுவிட்டதால் அந்த தீக்குச்சி தமிழரசன் மீது பட்டது, தமிழரசனை காப்பாற்ற விஜயகணபதி முயற்சித்த போது அவருக்கும் தீக்காயம் ஏற்பட்டது என்று சொன்னால் அது தவறு.

சம்பவத்திற்கு மறுநாள் எங்கள் ஊரிலும் நெமிலியிலும்

போரட்டம் நடைபெற்றது என்றும், குறிப்பிட்ட அரசியல் கட்சியை சேர்ந்த நபர்கள் போரட்டம் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த போரட்டத்தின் விளைவாக காவல் துறையை நிர்பந்தப்படுத்தி சங்கரை இந்த சம்பவத்தில் இருந்து காப்பாற்ற எதிரிகளின் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:30:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.